"ராம் கிராமத்தில் வசிக்கிறான். இது அவனுடைய வீடு. அவன் வீட்டில் பசுக்களும், கோழிகளும் உள்ளன. அவனது வீட்டின் பக்கத்தில் மாட்டுக் கொட்டகை உள்ளது."

"ரம்யாவும் கிராமத்தில் வசிக்கிறாள். அவள் வீட்டிற்குப் பின்புறம் காய்கறித் தோட்டம் உள்ளது."

"ரேகா நகரத்தில் உள்ள ஒரு பெரிய அடுக்குமாடி கட்டடத்தின் மூன்றாவது தளத்தில் வசிக்கிறாள். அவளுக்கு தன் செல்லப் பிராணியான நாயை வளர்ப்பது மிகவும் பிடிக்கும்."

சீனு : "அம்மா! எனக்கும் வளர்க்க ஒரு நாய் வேண்டும்."

அம்மா : சரி, சீனு.

அம்மா : "ராகவ் ஒரு மலைப்பாங்கான பகுதியில் வசிக்கிறான். அவனுக்குப் பூக்கள் என்றால் மிகவும் பிடிக்கும். அவன் வீட்டின் முன்புறம் அழகான பூந்தோட்டம் உள்ளது."

"ரகு ஒரு ஆற்றங்கரை ஓரத்தில் வாழ்கிறான். அவனது வீட்டைச் சுற்றி பல தென்னை மரங்கள் உள்ளன."

சீனு : "எனக்கு சலசலவென்ற ஆற்றின் ஒலி மிகவும் பிடிக்கும்."

நமது வீடுகளை எப்போதும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்க வேண்டும். வீடு வெயில், குளிர், மழை, புயல், காட்டு விலங்குகளிடமிருந்து நம்மைப் பாதுகாக்கிறது.

நமது முகவரியை எழுதக் கற்றுக் கொள்ளலாமா!

பெயர்	:	________________
கதவு எண்	:	________________
தெருவின் பெயர்	:	________________
கிராமம்/நகரம்/மாநகரம் பெயர்	:	________________